திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருத்தணி பொது மருத்துவமனையில் படுக்கை வசதிகள் குறைவாக இருப்பதால், பல நோயாளிகள் தரையில் படுக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு திருத்தணி சண்முகம் அவர்கள் எழுப்பிய மூலகேள்விக்கு நான் பதில் அளித்தேன். இப்போது மாண்புமிகு ஆரணி சண்முகம் அவர்கள் இன்னொரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். ஒரு நல்ல செய்தி, அவருக்கு தெரிந்திருக்குமோ, என்னவோ தெரியாது. சென்னையிலிருந்து 'டிரான்ஸ்பர் ஆப் டெகனாலஜி' என்ற திட்டத்தின் அடிப்படையிலே, சுற்றுப்புறத்தில் இருக்கிற நோயாளிகளை கூட்டி வந்து, நல்ல நிபுணர்களை அழைத்து வந்து 15 நாட்களுக்கு ஒருமுறை 'ஆபரேஷன்' முதலியவற்றை அங்கே செய்து கொண்டிருக்கிறோம். டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனையிலே கிடைக்காத அளவிற்கு அங்கே வசதிகள் கிடைக்கக்கூடிய அளவிற்கு நாம் ஏற்பாட்டை செய்திருக்கிறோம். ஆகவே அந்த மருத்துவமனை மக்கள் மத்தியிலே பாராட்டுதலுக்குரிய ஒரு மருத்துவமனையாக விளங்குகிறது.

### சென்னை-வேதாரண்யம் விரைவுப் பேருந்து பணி.

* வினா எண் 985—திரு. பொ. உத்திராபதி :— மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் இருந்து வேதாரண்யத்திற்குச் சென்று கொண்டிருந்த அரசு விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) அதை மீண்டும் தொடங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) பொதுமக்களின் நன்மையைக் கருதி, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ம் நாள் முதல் இத்தடத்தில் பேருந்துகளை மீண்டும் இயக்கி வருகிறது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, நாங்கள் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு திரும்பவும் அந்தப் பேருந்தை விட்டதற்கு எனது தொகுதி மக்களின் சார்பாக

நன்றியைத் தெரிவிப்பதோடு, அந்த வேதாரண்யம் என்பது சர்தார் வேதரத்தினம் பிள்ளை பிறந்த ஊர்; மூதறிஞர் இராஜாஜி அவர்கள் உப்பு சத்தியாகிரகத்தில் கலந்துகொண்ட ஊர்; இப்போது அந்த ஊருக்கு விட்டிருப்பது சாதாரண பஸ்; மேலும் அந்த பகுதியிலே இருந்து வருவதற்கு ஒரு சூப்பர் பஸ்ஸை விடுவதற்கு அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பர் வண்டி கேட்கிறார்கள். அதற்கடுத்து ஏ. சி. பஸ் கேட்பார்களோ என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவரவர்களே, அந்தத் தடத்திலே அடிக்கடி பழைய பேருந்தை விடுவதால், டயர் பங்ச்சர் ஆகி இரண்டு மணி, மூன்று மணி என்று காலதாமதமாக வருகிற நிலைமைகள் இருக்கிறது. சூப்பர் டீலக்ஸ் பஸ் விடுவதற்கு முன்னால், புதிய பேருந்தை விடுவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போகிறார் என்பதற்காக மட்டும் நாம் புதிய வண்டியைவிட முடியாது. பழைய வண்டிகள் பழுதாகி இருந்தால் அது நிச்சயமாகக் கவனிக்கப்படும். ஆனால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை நாம் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பேருந்துகளை மாற்றி வருகிறோம். அதை நல்லமுறையில் கண்காணித்தும் வருகிறோம். டயர் 'பங்ச்சர்' ஆகி நிற்பது என்பது வெயில் காலத்தில் அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்பட்டிருக்குமே தவிர, வேலையில் கவனக் குறைவாக இருந்த காரணத்தால் அப்படி ஏற்பட்டிருக்காது. இருந்தாலும்கூட அதைக் கவனிக்கச் சொல்லி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நாங்கள் உத்தரவிடுவோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் கூட கவனிக்கப்படும்.

### கம்பத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக பணிமனை கட்டும் திட்டம்.

*வினா எண் 986. திரு. ஆர். டி. கோபாலன் :—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நிற்பதற்கு நிரந்தரமான டிப்போ கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இதற்கான திட்டம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திடம் உள்ளது.